


கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்லாசியுடன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் வானூர் சட்டமன்றத் தொகுதி, கண்டமங்கலம் மத்திய ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டத்தில், விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ . கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி, வானூர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் T.கௌதம் திராவிட மணியை ஆதரித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் கண்டமங்கலம் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் சீனு.செல்வரங்கம், கண்டமங்கலம் ஒன்றிய குழு பெருந் தலைவர் ஆர்.எஸ்.வாசன் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், கழக சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வேட்பாளர் சி.வி. கணேசன் மங்களூர் தெற்கு ஒன்றியம் மலையனூரில் வாக்குச் சேகரித்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் பா. செங்குட்டுவன் மற்றும் நிர்வாகிகள் வாக்குச் சேகரித்தனர்.

# மானாமதுரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. இன்று தேர்தல் பிரச்சாரம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, ஏப்.2-

நடைபெற உள்ள சட்ட மன்றத் தேர்தலில் மதச்சார் பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து முன்னணி தலைவர்கள் தீவிர தேர்தல் பிரச்சாரத்தினை மேற்கொண்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இன்று (2ம் தேதி -வியாழக்கிழமை) காலை 10 மணி முதல் 12 மணி வரையில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தேர்தல் பரப்புரையில் ஈடுபடுகிறார். காலையில் மதுரையில் இருந்து வேன் மூலம் திருப்புவனம் மானாமதுரை ஆகிய ஊர்களில் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.வை ஆதரித்து வாக்கு சேகரிக்கிறார். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள், மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

## (இரண்டாவது பட்டியல்)

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்க்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - | பார்வையாளர் |
|---|---|---|
| சீர்காழி, மயிலாடுதுறை | – | குத்தாலம் பி. கல்யாணம் |
| பொள்ளாச்சி, வால்பாறை | – | டாக்டர் மகேந்திரன் |
| பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு | – | தடங்கம் சுப்பிரமணி |
| தருமபுரி, பென்னாகரம் | – | டி.செங்குட்டுவன் |
| உதகமண்டலம், கூடலூர், குன்னூர் | – | எஸ். மோகன் |
| ஓசூர், தளி, கிருஷ்ணகிரி, பர்கூர் | – | பார் இளங்கோவன் |
| பெரம்பூர் | – | இரா. கிரிராஜன், எம்.பி., |
| அம்பத்தூர் | – | வழக்கறிஞர் சலீம் |
| திரு.வி.க.நகர் | – | தமிழ் க.அமுதரசன் |
| திருவள்ளூர் | – | செஞ்சி சிவா |
| அந்தியூர் | – | ஏ.ஜி.வெங்கடாசலம் |
| ஈரோடு கிழக்கு | – | செந்தில்குமார் |
| ஈரோடு மேற்கு | – | திருச்செங்கோடு கந்தசாமி |
| மொடக்குறிச்சி | – | எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் |
| குமாரபாளையம் | – | காந்திசெல்வன் |
| நன்னிலம் | – | குத்தாலம் க. அன்பழகன் |
| அரூர் | – | சத்தியமூர்த்தி |
| ஏற்காடு | – | எஸ்.ஆர். பார்த்திபன் |
| பரமக்குடி | – | வ.சத்தியமூர்த்தி |
| வாசுதேவநல்லூர் | – | செண்பகவிநாயகம் |
| சங்கரன்கோவில் | – | தங்கவேலு |
| சிவகாசி | – | தனுஷ் எம். குமார் |
| மதுரை மத்திய | – | சேலம் தரணிதரன் |

குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 31.03.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.




இராணிப்பேட்டைமாவட்டம் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் பேசினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, நகர செயலாளர் ஏ.வி.சரவணன், மற்றும் தே.மு.தி.க., காங்கிரஸ், கூட்டணிக் கட்சியினர் கலந்து கொண்டனர்.

## நெல்லை கிழக்கு மாவட்ட

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி செயல் வீரர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிவிப்பு!



நெல்லை, ஏப்.2-

நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி,

கழக துணை பொதுச் செயலாளர், தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் ஆலோசனையின்படி, இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்களை ஆதரித்து, நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம் பெல் தலைமையில்,வள்ளியூர் பி.ஆர்.மஹாலில் வைத்து இன்று (02.04. 2026-வியாழக்கிழமை)காலை 10 மணிக்கு செயல்வீரர் கூட்டம் நடைபெறுகிறது.

எனவே தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்,மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், வள்ளியூர் வடக்கு, வள்ளியூர் தெற்கு,பணகுடி பேரூர், வள்ளியூர் பேரூர் கழக நிர்வாகிகள், BLA2, BDA, BLC, மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தலைமையில்

# திருநெல்வேலி தொகுதியில் செயல்வீரர்கள் கூட்டம்!

## சு.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை.ஏப்.2

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ தலைமையில் இன்று (வியாழக் கிழமை-02.04.2026) காலை 9 மணிக்கு பேட்டை சாலை கோடிஸ்வரன்நகர் ராஜா மஹாலில் வைத்து நடைபெறுகிறது.என நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளரும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளருமான சு.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆகவே மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன் .

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தி. மு. க. தொழிலாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொழிலாளர் அணியின் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் - சுந்தராஜ் (எ) வெங்கிடுபதி ஜே.வி.எல். நகர், பூலாங்கிணறு அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642122, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – கே. நாகராஜ் 66, சிவசக்தி குடியிருப்பு, தாராபுரம் சாலை, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - பி.சி. புஷ்பராஜ் 3/159, சுங்காரமடக்கு, வடுகபாளையம், உடுமலைப்பேட்டை - 642205, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மு. அய்யாவு 5/495, முருகன் நகர், கணக்கம்பாளையம் அஞ்சல், உடுமலைப் பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 2) ச. விஜயகுமார் 143, கழுகரை வீதி, யூனியன் ஆபீஸ் அருகில், மடத்துக்குளம் - 642113, திருப்பூர் மாவட்டம். 3) மு. சிவக்குமார் 726, மலையாண்டிபட்டணம், துங்காவி அஞ்சல், மடத்துக்குளம் - 648203, திருப்பூர் மாவட்டம். 4) அ. ராஜேந்திரன், 26, காந்தி நகர், பாலக்காடு ரோடு, ஜமீன் ஊத்துக்குளி, பொள்ளாச்சி - 642004, திருப்பூர் மாவட்டம். 5) ஆ. செந்தில்குமார் 334, பஞ்சாயத்து ரோடு, அரியநாச்சிபாளையம், மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம். 6) த. காளிதாசன் 3/245சி, நால் ரோடு, குடிமங்கலம், உடுமலைப்பேட்டை - 642201, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31-03-2026.

**பிடிசி ஜி.செல்வராஜ்**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி

## தி. மு. க. தொழிலாளர் அணி

# இராமநாதபுரம் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

இராமநாதபுரம் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்களாக **எஸ். பாலகிருஷ்ணன்,** (சேதுபதி நகர், நாகாச்சி உச்சிப்புளி அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம்), **கா.சத்தியேந்திரன்** (எல்.கருங்குளம், எட்டிவயல் அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31-03-2026.


**பிடிசி ஜி.செல்வராஜ்**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி



வேலூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் ப.கார்த்திகேயன் பெருமுகையில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.உடன்கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சியினர் கலந்து கொண்டனர்

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஜி.எம். ஷா
### ஏப்ரல் 2 (2014)



கன்னியாகுமரி மாவட்டக் கழகச் செயலாளராக 1959ல் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். 1993ஆம் ஆண்டு மாவட்ட பொறுப்புக்குழு தலைவர், 1999ஆம் ஆண்டு மாவட்டப் பொறுப்பாளர் ஆகிய பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

மேலும் கழக பொதுக்குழு, செயற்குழு, சொத்து பாதுகாப்புக்குழு, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

1965 முதல் 1990 வரை மற்றும் 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை தொடர்ந்து தொடர்ந்து 30 ஆண்டுகள் வடக்கு சூரங்குடி ஊராட்சி தலைவராக மூன்று முறை போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு மக்கள் நலப் பணியாற்றியவர்.

1976ஆம் ஆண்டு அவசரநிலைக் காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்துள்ளார். மேலும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**